வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06
29.04.2025 செவ்வாய்க்கிழமை
இதழ் : 120
பக்கங்கள் : 12




# தையிட்டி விகாரைச் சூழலில் காணிகளை விடுவிக்க முடிவு

## உள்ளூராட்சி தேர்தலுக்கு முன் சாத்தியம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

**வலி. வடக்கு - தையிட்டி பகுதியில் ஆக்கிர மிக்கப்பட்ட பொதுமக்களின் நிலத்தில் கட்டப்பட் டிருக்கும் விகாரையைச் சூழ இருக்கும் காணி கள் பலவற்றை விடுவிப்பதற்கு அரச உயர் மட் டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவரு கின்றது.**

எதிர்வரும் 6ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் பெரும்பாலும் அடுத்து வரும் சில தினங்களில் இந்தக் காணி விடுவிப்பு இடம்பெறும் சாத்தியங்கள் உள்ளன எனத் தெரிகின்றது.

இப்போது தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ள காணிகளைத் தவிர்த்து சுற்றாடலில் இன்னமும் பொது மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படாத காணிகளை அடையாளம் கண்டு விடுவிப்பதற்கான நடவ டிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

11

# படுகொலையான ஊடகர்களுக்கு நீதி கேட்டு யாழில் ஆர்ப்பாட்டம்




யாழ்ப்பாணம், ஏப். 29

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினை வேந்தல் நிகழ்வும் அவர்களின் படுகொலைக்கு நீதி கோரிய போராட்டமும் நேற்று

11

# புதிய பாப்பரசர் தெரிவுக்கான மாநாடு 7ஆம் திகதி ஆரம்பம்

வத்திக்கான் சிற்றி, ஏப். 29

புதிய பாப்பரசரை தேர்ந்தெடுப்பதற்கான மாநாடு மே 7ஆம் திகதி ஆரம்பமாகும் என்று வத்திக்கானின் பத்திரிகை அலுவலகமான ஹோலி சீ தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில்- புதிய பாப்பரசரை தேர்ந் தெடுப்பதற்கான மாநாடு மே 7 ஆம் திகதி தொடங்கும். தற்போது ரோமில் உள்ள கர்தினால்கள் நேற்று (திங்கள்கிழமை) கூடி தங்கள் ஐந்தாவது பொதுச் சபையில் இந்த முடிவை எடுத்தனர்.

11

# சீனாவின் வர்த்தக அமைச்சர் ஜூனில் இலங்கை வருகிறார்

கொழும்பு, ஏப். 29

சீனாவின் வர்த்தகத்துறை அமைச்சர் வாங் வென் டாவோ, எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலக நாடுகளுக்கு விதித்துள்ள பரஸ்பர தீர்வை வரியின் காரணமாக பல்வேறு நாடுகள் வர்த்தக ரீதியான பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில், அவரது வருகை நிகழவுள்ளது.

11

# அநுர அரசாங்கத்தின்மீது விரக்தியில் பொதுமக்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



கொழும்பு, ஏப். 29

அரசாங்கத்தின் மீது மக்கள் விரக்தி அடைந்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்கமுவயில் இடம்பெற்ற தேர் தல் பிரசார கூட்டத்தின் போதே அவர் இதனை

11

# நாட்டில் நடந்த ஊழல் என்ன? அரசு வெளிப்படுத்தவேண்டும்

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஏப். 29

நாட்டில் இடம்பெற் றுள்ள ஊழல் என்ன என்பதை நாட்டு மக்க ளுக்கு அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என பொதுஜன பெரமுன வின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன வின் தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

தேர்தல் பிரசார நட வடிக்கைகளில் ஜனாதி பதி அநுரகுமார திஸநா யக்க பங்கேற்று வருகி றார். இதன்போது ஜனா திபதி ஊழல் மோசடி



களை நிறுத்த நடவ டிக்கை எடுக்கப்படும் என கூறி வருகிறார். ஆனால் ஜனாதிபதி

11

# அதீத வெப்பம்; முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணத்தில் நிலவும் அதீத வெப்பம் காரணமாக முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இணுவிலை சேர்ந்த 75 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந் தார். இணுவில் பகுதி யில் வீதியோரமாக உள்ள தோட்டக்காணி ஒன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்

11

# மத்தள விமான நிலையம் விற்பனை செய்யப்படலாம்

## கூறுகிறார் உதயங்க வீரதுங்க

கொழும்பு, ஏப். 29

மத்தள விமான நிலையத்தை விற்பனை செய்வதற் கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக ரஷ்யாவுக் கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

11

# யாழில் மின்னல் அனர்த்தம் காரணமாக 19 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மின்னல் அனர்த்தம் காரணமாக இதுவரை 6 குடும்பங்களைச் சேர்ந்த 19பேர் பாதிக்கப்பட்டுள்ளுடன் 4 வீடுகளும் பகுதியில் சேதம டைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகா மைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரிய ராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உடுவில் பிரதே செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/208 கிராம சேவகர் பிரிவில் இரு குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/279 கிராம சேவகர்

11

# எமது போராட்டத்தை முடக்க அநுரவின் அரசு தீவிர முயற்சி

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பகிரங்க குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஏப். 29

புதிய ஆட்சி வந்ததும் ஏதோ எங்களுக்கு அனைத் தும் கிடைத்துவிட்டது என்று ஒருபோதும் கனவு காணவேண்டாம். கடந்த கால ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றி எவ்வாறு எமது இனத்தினை அழித்தார்களோ அதனைவிட படுமோசமான அரசியல் வியூகத்துக் குள்ளேயே நாங்கள் தற்போது நின்றுகொண்டி ருக்கிறோம் என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின்

11

# எனக்கு நீதி கிடைக்குமா என்பது தெரியவில்லை

## ரணில் விக்கிரமசிங்க ஆதங்கம்



ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆணைக்குழுவில் முன்னிலையாக வந்த தருணம்...

கொழும்பு, ஏப். 29

தனக்கு நியாயம் நிலைநாட்டப்படுமா என்பது தெரி யாது என்பதால் தனது சட்டத்தரணிகளுக்கு இலஞ்ச, ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் தருமாறு கோரியுள் ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப கல்லூரியை விடுவிக்குமா அரசாங்கம்?

## சிறீதரன் எம்.பி கேள்வி



கிளிநொச்சி, ஏப். 29

போர்க்காலம், சமாதான காலம் என்ற நிலைமாறுதல்கள் எல்லாவற்றையும் கடந்து, கல்வி, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் தளங்களை சமநிலையில் மேலுயர்த்திய விடுதலைப் புலிகளின் காலத்தில், கிளிநொச்சி மண்ணின் அடையாளங்களுள் ஒன்றாக இருந்த ஆனைவிழுந்தான் தொழில்நுட்பக் கல்லூரியை இராணுவத்திடமிருந்து விடுவித்து, மீள இயக்குவதற்கு இந்த அரசாங்கமாவது நடவடிக்கை எடுக்குமா? என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம், தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து வன்னேரிக்குளம் வட்டாரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் வன்னேரிக்குளம் வட்டாரக் கிளைத் தலைவர் தியாகராசா செந்தூரன் தலைமையில் ஆனைவிழுந்தானில் நடைபெற்ற கூட்டத்தில், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் உறுப்பினரும் வன்னேரிக்குளம் வட்டார வேட்பாளருமான நாகேந்திரம் செல்வநாயகம், குறித்த வட்டார வேட்பாளரான சிவலிங்கம் பிறின்ஸ் சிந்துஜன், போதகர் சிவலிங்கம் சாம்சன், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் உறுப்பினர் சுந்தரமூர்த்தி தயாபரன், அக்கராயன் வட்டார வேட்பாளர் தட்சிணாமூர்த்தி முரளி ஆகியோர் உரையாற்றியிருந்ததுடன், பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முல்லைத்தீவில் சிவராம் நினைவு




முல்லைத்தீவு, ஏப். 29

மூத்த ஊடகவியலாளர் மாமனிதர் 'தராகி' சிவராமின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் கணபதிப்பிள்ளை குமணன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஊடகவியலாளர் சிவராமின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, சுடரேற்றி மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நடைபெற்றது. ஊடகவியலாளர்கள் பலர் அஞ்சலி செலுத்தினர். (அ)

# உள்ளக அலுவல்கள் அலகு யாழ்.மாவட்ட செயலகத்தில்!

யாழ்ப்பாணம், ஏப். 29

இலங்கையின் ஊழலை ஒழிக்கும் செயல்பாட்டுத் திட்டத்தை மாவட்ட மட்டத்தில் செயல்படுத்துவதற்கான ஆரம்ப கட்டமாக பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் இலஞ்சம் மற்றும் 'ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை முறையிடுவதற்கு உள்ளக அலுவல்கள் அலகு' எனும் பிரிவு நேற்றுக் காலை 09.00 மணிக்கு உத்தியோகபூர்வமாக யாழ். பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் மாவட்ட செயலகத்தில் திறந்துவைக்கப்பட்டது.

இவ் அலகை திறந்துவைத்து உரையாற்றிய அரசாங்க அதிபர், ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மாவட்ட மட்டத்தில் உள்ளக அலுவல்கள் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஊழல் செயல்பாடுகளை தடுப்பதாகவும் அதே வேளை அலுவலகச் செயல்பாடுகள் வெளிப்படுத்தன்மையுடையதாகவும் இருக்கவேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கு அமையவும், பொதுமக்கள் மாவட்ட செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான விவரங்களை அறிந்து கொள்வதற்கும், குறிப்பாக அலுவலக நடைமுறைகள் தொடர்பாகவும் அல்லது ஏதாவது விடயங்கள் தொடர்பிலும் பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்படுகின்றபோது இந்தப் பிரிவை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இதனை நம்பகத்தன்மையான அலுவலகமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் முறைப்பாடுகளை முன்வைக்க விரும்பின் இந்த அலுவலகத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிப்படுத்தன்மை மற்றும் ஊழலற்ற இலஞ்சமற்ற பிரதேசத்தை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நிர்வாகத்தின் நடைமுறைகளை பின்பற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும்- என்றார்.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ-05)



# மரக்கடத்தல் முறியடிப்பு!

கிளிநொச்சி, ஏப். 29

புதுக்குடியிருப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி முன்னெடுக்கப்பட்ட மரக் கடத்தல் ஒன்று நேற்றுமுன்தினம் முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து ஏ-35 பிரதான வீதியினூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சிறிய ரக லொறி ஒன்றில் மரக் கடத்தல் இடம்பெறுவதாக தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

கிடைத்த தகவலுக்கு அமைவாக தருமபுரம் பொலிஸார் வீதிச் சோதனையை மேற்கொண்டபோது பெறுமதி மிக்க 12 முதிரை மரக்குற்றிகளுடன் சிறிய ரக வாகனச் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் அவரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தர்மபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்தார். (அ-05)

## சங்காபிஷேகம்



கிளிநொச்சி, ஏப். 29

இயக்கச்சி திரியாய் பர்வத வர்த்தினி அம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகம் நிறைவடைந்ததும் [illegible] (02)

# தமிழ்த் தேசியப் பேரவைக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும்

## மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம்

யாழ்ப்பாணம், ஏப். 29

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் "சைக்கிள்" சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய பேரவைக்கு வாக்களிக்குமாறு மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் அறிக்கை மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கடந்த பொதுத்தேர்தலில் மக்களால் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு மதிப்பளித்து தனது போக்கை மாற்றி தானாக முன்வந்து தமிழ் தேசிய பேரவை என்ற பெயரில் புதிய கூட்டமைப்பை அமைப்பதற்கு செயலாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் செயல்பாடுகள் வரவேற்கத்தக்கவை.

தமிழ்தேசிய பேரவைக்குள் உள்வாங்கப்பட்ட கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் கொள்கையில் உறுதியானவர்களாகவும் நேர்மையானவர்களாவும் மக்களின் பார்வையில் தென்படுகின்றனர்.

அவர்களின் கொள்கை உறுதியும் போராட்டத்திறனும் தேசியப்பற்றும் பெரும் கூட்டாக வரும் என மக்கள் நம்புகின்றனர்-என்றுள்ளது. (அ)

## மாணவர்கள் மீதான அடக்குமுறை:

# விசாரித்து அறிக்கையிடுமாறு ஆணைக்குழு வேண்டுகோள்!

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி விடுதி ஒன்றில் வைத்து முதலாமாண்டு மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் வலுக்கட்டாயமாகப் பொய் வாக்கு மூலங்களில் கையொப்பம் இடுமாறு மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்களால் பணிக்கப்பட்டமை மற்றும் மாணவர்களின் சம்மதமின்றி காணொலி வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டமை தொடர்பில் உடனடியாக விசாரணை செய்து அறிக்கையிடுமாறும், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கைகளில் இருந்து அம் மாணவர்களைப் பாதுகாக்குமாறும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர், யாழ்ப்பாண பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு அறிவுறுத்தியிருப்பதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்கு அறிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள்மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளின்போது மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் பலகலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஒழுக்காற்று விதிகளை மீறி, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கமைவாக நடந்து கொள்வதாகவும், இந்த விதிமீறல்கள் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதாகவும் பல்கலைக் கழக மாணவர்கள் மூவர் மேற்கொண்ட முறைப்பாடுகள் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு வினவிய போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கும், அதனடிப்படையில் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தேவையான அறிவுறுத்தல்களை மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு வழங்கியுள்ளதாக மானியங்கள் ஆணைக்குழுவின் பகிடிவதைக்கு எதிரான விசாரணைப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu ஈழநாடு

29.04.2025 செவ்வாய்க்கிழமை

விசுவாவசு வருடம், சித்திரை 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# தமிழ் வாக்காளர்கள் சிந்திக்கத் தெரியாதவர்களா?

இலங்கையின் ஆட்சியாளர்கள் எவராக இருப்பினும் அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்ததில்லை. இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபகத் தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் பண்டாரநாயக்காவுடன் பேச்சுகளில் ஈடுபட்ட காலத்திலிருந்து, இன்றுவரையில் கொழும்பின் ஆட்சியாளர்களின் அரசியல் சிந்தனையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. இதுபற்றி, புதிதாகப் பேசுவதற்கு - விவாதிப்பதற்கு எதுவுமில்லை.

சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க (பெயரளவு மைத்திரி அரசாங்கம்) அதிகாரத்தில் இருந்த காலத்தில் சில மாற்றங்கள் காண்பிக்கப்பட்டமையை தவிர, வேறு எந்தவோர் உதாரணங்களும் இல்லை. இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பில் அதிகம் அலட்டிக்கொள்ள எதுவுமில்லை. ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியை தட்டிப்பறிக்க வேண்டும் - முக்கியமாகத் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துவிடக்கூடாது என்பதற்காக அளவுக்கதிகமாக ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பற்றி தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் பேசி வருகின்றனர். தேசிய மக்கள் சக்தியை பார்த்து தமிழ் கட்சிகள் அச்சமடைந்திருப்பதான தோற்றமே இதன்மூலம் அதிகம் வெளிப்படுகிறது. உண்மையில், இது தேவையற்ற பிரசாரம். இதனை விடுத்து, தாங்கள் விடயங்களை எவ்வாறு கையாளப் போகிறோம், உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் எவ்வாறான அரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் என்பதைக் கூறினால், மக்கள் சிந்திக்கத் தலைப்படுவார்கள் அல்லவா!

தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றால் இனப்பரம்பலை மாற்றியமைப்பார்கள் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். ஆனால், இதே சுமந்திரன் அநுர குமார திஸநாயக்க தொடர்பில் உயர்வாக பேசிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால், இப்போது அவர்கள் இனப்பரம்பலை மாற்றியமைப்பார்கள் என்கிறார். இதேபோன்று ஏனையவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத் தரப்புகளோடு பயணித்திருக்கின்றனர். கஜேந்திர குமார் பொன்னம்பலத்துக்கு அவ்வாறான பின்னணி இல்லாவிட்டாலும்கூட, அவருடன் கூட்டணி அமைத்திருப்பவர்களுக்கு அவ்வாறான பின்னணி உண்டு.

அரசாங்கங்களோடு பேசத்தான் வேண்டும். தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் மக்களின் நலனுக்காக ஆட்சியாளர்களோடு தொடர்புகொள்வதும் தேவைப்பட்டால் உடன்பாடுகளை வெளிப்படையாகவும் இரகசியமாகவும் மேற்கொள்வதும் தேவையானதுதான். ஆனால், அவைகள் மக்களுக்கானவையாக இருக்க வேண்டும்.

ஆனால், இங்குள்ள பிரச்னை வேறு. தங்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக ஆட்சியிலுள்ளவர்களோடு ஒட்டி உறவாடி, அதனை மக்கள் மத்தியில் நியாயப்படுத்துபவர்கள் பின்னர் தேர்தல் வெற்றிக்காக தலைகீழாகப் பேசுவதுதான் தவறானது.

தங்களுக்கு வசதியான அரசியல் சூழல் இருக்கின்றபோது ஆளும் தரப்பை போற்றிவிட்டு, பின்னர் தங்களுக்கு தேவையில்லை என்கிறபோது, அவர்களை தூற்றுவதும் அவர்கள் பற்றிய அச்சத்தை ஏற்படுத்த முற்படுவதும் அடிப்படையில் நேர்மையான அரசியல் அல்ல.

தேர்தல் காலத்தில் நமது அரசியல்வாதிகள் பேசுகின்ற பல விடயங்களை உற்றுநோக்கினால் தமிழ் மக்கள் ஒரு முட்டாள் கூட்டம் என்னும் பார்வையிலிருந்தே முன்வைக்கப்படுவதாகத் தெரிகிறது. இது ஒரு வகையில் ஹிட்லரின் அணுகுமுறைக்கு ஒப்பானது. ஹிட்லர் பேசுகின்றபோது, தனக்கு முன்னால் இலட்சக்கணக்கான முட்டாள்கள் இருக்கிறார்கள் என்று நினைப்பதாகக் கூறப்படுவதுண்டு. அதாவது, தான் எதைக் கூறினாலும் தனக்கு முன்னால் இருப்பவர்கள் அசைவற்று கட்டுண்டு கிடப்பார்கள் என்னும் நம்பிக்கை. தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் வாக்காளர்களையும் அப்படித்தான் கருதுகின்றனரா?

# நயினாதீவு இறங்குதுறையில் மக்கள் நேற்று கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 29

நயினாதீவைச் சேர்ந்த பொதுமக்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். நயினாதீவு இறங்குதுறையில் மணல் ஏற்றி - இறக்கும் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நீதி வேண்டியே இவ்வாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.



நேற்று முன்தினம் மணல் ஏற்றி இறக்கும் இறங்குதுறையில் தொழிலாளிகளுக்கும் தொழில் வழங்குநருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறி இருந்தது. இதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் தொடர்ந்தும் முறுகல் நிலை ஏற்பட்டிருந்த நிலையில் தொழிலாளி ஒருவர் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் தொழிலாளிகளின் உறவினர்கள் அவருடன் முரண்பாட்டில் ஈடுபட்ட இருவரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். பொலிஸ் நிலையத்தில் இரு தரப்பினராலும் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் காணாமல் போனவரும் மற்றும் ஒரு தரப்பினரின் கட்டுப்பாட்டில் இருந்த இருவரும் சம்பந்தப்பட்டவர்களால் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், தொழிலாளிகள் தரப்பைச் சேர்ந்த எட்டு பேரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸார் பக்கச்சார்பாக நடப்பதாகவும் இதற்கு நீதி கோரியும் ஊர்காவற்றுறை இறங்குதுறையில் இக்கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. (அ-05)

# தராகி சிவராம், ரஜிவர்மன் நினைவேந்தல் வடமராட்சி ஊடக இல்லத்தில் அனுஷ்டிப்பு!

வடமராட்சி, ஏப். 29

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராகி சிவராம், செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி ஊடக இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.




ஊடகவியலாளர்களான தராகி சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் செல்வராசா ரஜிவர்மனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.


ஊடகவியலாளர் தராகி சிவராம் கடந்த 2005 ஏப்ரல் 28 ஆம் திகதி கொழும்பு - பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம் அருகில் வைத்து இனம் தெரியாதவர்களால் வெள்ளை வானில் கடத்தப்பட்ட பின்னர் சுட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் பாராளுமன்றத்துக்கு அருகில் அவரது சடலம் மீட்கப்பட்டிருந்தது.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜிவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்தவேளை கடந்த 2007 ஏப்ரல் 29ஆம் திகதி காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் நகரில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.


வடமராட்சி ஊடக இல்ல செயலாளர் இரா. மயூதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட தராகி சிவராம், செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு வடமராட்சி ஊடக இல்லத் தலைவர் கு. மகாலிங்கம் மாலை அணிவித்தார். தொடர்ந்து ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில், வடமராட்சி ஊடக இல்லத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய செயல்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சிலவேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**இடபம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான் மையும் வந்துசெல்லும். உறவினர் நண்பர்களு டன் நெருடல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

**மிதுனம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வாகனவசதிப் பெருகும்.

**கடகம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்று வீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். அவசரத்திற்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள் ளாதீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உய ரும். சகோதர வகையில் நன்மை உண்டு. கல் யாணபேச்சு வார்த்தை வெற்றியடையும். வாக னத்தை சரிசெய்வீர்கள். தெளிவு பிறக்கும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுபவிஷயங்களில் கலந்து கொள்வீர்கள். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியா பாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும்.

**தனுசு**
புதிய முயற்சியாவும் வெற்றி அடையும். பிள்ளை கள் குடும்பசூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். அநாவசிய செலவை கட்டுப்படுத்துவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை, கால் வலி, சோர்வு வந்து நீங்கும்.வழக்கில் திடீர் திருப்பம் வரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமா வார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபா ரத்தில் எதிர்பாராததனலாபம் உண்டு.

**மீனம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் போட்டிகள் வரும்.

வட்டுக்கோட்டை சிறுமி துஷ்பிரயோகம்:

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டாலேயே சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 29

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் சிறுமி துஷ்பிரயோகத் துக்கு உள்ளாக்கப்பட்டமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பணி மனையின் நடவடிக்கையின் மூலமே வெளிக்கொணரப்பட் டது என்று அதன் இணைப்பா ளர் த. கனகராஜ் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில், அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

"குறித்த சிறுமி 12 வயதிலி ருந்தே துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார். இந்த நிலையில், கடந்த 24ஆம் திகதி எமது பணிமனைக்கு வந்த அந்த சிறுமி தனக்கு நேர்ந்ததை எமக்கு தெரிவித்தார்.

"எமது பணிமனை துரிதமாக செயல்பட்டு அன்றைய தினமே வடக்கு மாகாண நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் ஊடாக யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சிறுமி சேர்க்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையிலயே சந்தேக நபர்கள் கைது செய்யபட்டுள்ளனர்" - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

# இணுவில் பொது நூலக ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஏப். 29

இணுவில் பொது நூலகம் - சனசமூக நிலையத்தின் 23 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங் கல் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக வலிகா மம் வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ்சீ வனும் கலந்து கொண்டனர். (எ- 05)



# வவுனியா குளத்தில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

வவுனியா, ஏப். 29

வவுனியா, நெளுக்குளம் - நேரியகுளம் வீதியில் உள்ள தம் பனை புளியங்குளம் குளத்தில் மீட்கப்பட்ட சடலத்தை அடை யாளம் காண உதவுமாறு நெளுக் குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சம ரக்கோன் தெரிவித்தார்.

வவுனியா- இராசேந்திர குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட நெளுக்கு ளம்- நேரியகுளம் வீதியில் உள்ள தம்பனை புளியங்குளம் பகுதியிலிருந்து கடந்த முத லாம் திகதி சடலம் ஒன்று மீட் கப்பட்டது. 40 வயதுக்கு மேற் பட்ட ஒருவரின் சடலமே இவ் வாறு மீட்கப்பட்டது. மரண மடைந்து 10 - 15 நாட்களுக்கு பின்னரே சடலம் மீட்கப்பட்டது.

நீல நிற கோடு போட்ட மேலாடை அவரது சடலத்தின் அருகில் கண்டு பிடிக்கப்பட் டது.

உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதால் அடையா ளம் காணமுடியவில்லை. வவுனியா வைத்தியசாலையில் உள்ள பிரேத அறை குளிரூட்டி இயங்காமையால் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இதனை அடையாளம் காண உதவுமாறு கோருவதுடன், அவ்வாறு இல்லாவிடின் அரச செலவில் குறித்த சடலத்தை நல்லடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்ப டவுள்ளது.

எனவே, குறித்த நபர் தொடர் பில் தகவல் தெரிந்தால் நெளுக் குளம் பொலிஸ் நிலை யத்தின் 0718592778 அல்லது 0242054286 என்ற தொலை பேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளு மாறு பொலிஸ் அதி காரி மேலும் தெரிவித்தார். (எ-10)

# இரண்டு பதாகைகள் தாங்கி வரும் இ. போ. ச. பஸ், பயணிகள் குழப்பம்

கிளிநொச்சி, ஏப். 29

இரண்டு பதாகைகளுடன் சேவையில் ஈடுபடும் இ.போ. ச. பேருந்துகளால் பயணிகள் குழப்பமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் வட் டக்கச்சிக்கு மாத்திரம் செல்லும் ஒரு பேருந்து வட்டக்கச்சி பெயர் பலகையை மறைவான இடத் தில் வைத்து தவறாக அக்கரைப்பற்று பெயர்ப்பலகையுடன் பயணி களை ஏற்றுகிறது.

மிகவும் குறைந்த வேகத்தில் நகரும் இப்பேருந்து ஏ -9 வீதியில் வவுனியா வரை செல லக்கூடிய பயணிகளை ஏற்றிப் பயணிப்பதாக குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.



இதனால் தாமதமாக சேவைக்கு சென்று அறிக்கை டுவதால் தமது சொந்த விடுப் புக்கு பங்கம் ஏற்படுவதாக, குறித்த பேருந்தில் பயணிக்கும் அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# கணிதத் துறையில் ஹாட்லி மாணவன் முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப். 28

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் பெறுபே றுகள் கடந்த 26 ஆம் திகதி வெளியாகின.

இதன்படி, கணிதத்துறை யில் யாழ்ப்பாணம் ஹாட்லி கல்லூரி மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

அந்தப் பாடசாலையின் மாணவன் கந்ததாசன் தசரத் கணிதத் துறையில் 3ஏ சித்தி களை பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியையை தாக்கிய ஆசிரியைக்குச் சிறை !

கொழும்பு, ஏப். 29

துடைப்பக் கை பிடி மற்றும் குடையால் தாக்கி ஆசிரியை ஒருவரை காயப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட ஒரு ஆசிரியையை குற்றவாளி எனக் கண்டறிந்த அனுராதபுரம் மேலதிக நீதவான் பி.கே. திருமதி. சமரசிங்க அந்த ஆசிரியைக்கு சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

குற்றம் சாட்டப்பட்டு, குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஆசிரியைக்கு ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத் தண்டனை விதித்தார். பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் அபராதம் செலுத்தவும் அவர் உத்தரவிட்டார்.

மேலும், முறைப்பாடு செய்த ஆசிரியைக்கு முப்பதாயிரம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு பிரதிவாதியான ஆசிரியைக்கு நீதவான் உத்தரவிட்டார்.

மிஹிந்தலை, கன்னடிய, கல்வல சந்திப்பில் வசிக்கும் ஒரு பெண் ஆசிரியையை துடைப்பக் கைபிடி மற்றும் குடையால் தாக்கி காயங்களை ஏற்படுத்தியதாக 54 வயதான ஆசிரியைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2021 செப்ரெம்பர் 30, மிஹிந்தலை, கன்னட்டியவைச் சேர்ந்த 59 வயதான ஆசிரியையின் வீட்டுக்குள் நுழைந்து, இந்த தாக்குதலை ஆசிரியை மேற்கொண்டுள்ளார்.

தாக்கப்பட்ட ஆசிரியை, மிஹிந்தலை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக நீதிமன்ற விசாரணையின்போது தெரியவந்தது.

(அ)

# 90 வீதத்துக்கும் அதிகமான வாக்குச்சீட்டு விநியோகம்

கொழும்பு, ஏப். 29

உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ வாக்குச் சீட்டுகளில் 90 வீதத்திற்கும் அதிகமானவை விநியோகிக்கப்பட்டதாக இலங்கை தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.


இந்த வாக்குச் சீட்டுகளை வீடு வீடாக விநியோகிக்கும் பணி நாளைய தினத்திற்குள் நிறைவடையும் என துணை தபால்மா அதிபர் பிரேமரத்ன ஹேரத் தெரிவித்தார்.

உத்தியோகப்பூர்வ வாக்குச் சீட்டுகளைப் பெறாத வாக்காளர்கள் இன்று முதல் தங்கள் அருகிலுள்ள தபால் நிலையத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

உளளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பின் இறுதி நாள் இன்றாகும்.(அ)

# ஊழல், குற்றங்களுக்கு இருந்த அரசியல் பாதுகாப்பு அகற்றம்

## பிரதமர் ஹரிணி பெருமிதம்



கொழும்பு, ஏப். 29

75 ஆண்டுகளாக ஊழலுக்கும் குற்றங்களுக்கும் இருந்து வந்த அரசியல் பாதுகாப்பை தற்போதைய அரசாங்கம் நீக்கியுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ, /ஹங்கம மற்றும் தங்காலை பகுதிகளில் நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-75 ஆண்டுகளாக ஊழலுக்கும் குற்றங்களுக்கும் இருந்து வந்த அரசியல் பாதுகாப்பை நாங்கள் அகற்றியுள்ளோம். அந்த மக்கள் விரோத ஊழல்களுக்கும் குற்றங்களுக்கும் இனி எந்தப் பாதுகாப்பும் இல்லை. இதனால் பயந்து குழப்பமடைந்தவர்கள் அரச சேவையிலும் உள்ளனர். பாதுகாப்புத் தரப்பிலும் உள்ளனர். இவற்றையெல்லாம் அரசியல் ஆசீர்வாதத்துடனேயே மேற்கொண்டு வந்தனர்.

இப்போது அரசியல் ஆசீர்வாதம் இல்லாமல் போய்விட்டதால், எஞ்சிய முடிச்சுகளை அவிழ்க்க இது உள்நோக்கித் திருப்பப்பட்டுள்ளது. இப்போது அதைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள். அதன் இரண்டு மிகவும் பிரபலமான சம்பவங்களில் ஒன்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கைது செய்யப்பட்டதாகும். பின்னர் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டமை ஆகும். இதற்கு முன்பு பொலிஸ் மா அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இதற்காக பாராளுமன்றம் மூன்று பேர் கொண்ட குழுவையும் நியமித்துள்ளது. இன்று, அந்தக் கும்பலால் பாதுகாக்கப்பட்டவர்கள் கூட பயப்படுகிறார்கள்.

முன்னைய ஆளும் கட்சியில் அமைச்சரவை பதவிகளை வகித்த பிள்ளையான் போன்றவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அங்கேயும் சில வேடிக்கையான விடயங்களைப் பார்த்தேன். மொட்டுக் கட்சியினரின் கூற்றுப்படி, பிள்ளையான் தான் போரை வென்றுள்ளார். ஆனால், பல்கலைக்கழக துணைவேந்தர் ஒருவர் காணாமல்போனது தொடர்பாக பிள்ளையான் கைது செய்யப்பட்டார்.

பாடசாலைகள் பணம் அறவிடக்கூடாது என்று கூறப்பட்டாலும், அது இன்னும் நடப்பதாக எங்களுக்கு முறைப்பாடுகள் வருகின்றன. விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுப்போம். கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை விசாரிக்க அமைச்சில் போதுமான விசாரணை அதிகாரிகள் இல்லை. நாங்கள் இப்போது அந்த விசாரணைப் பிரிவை பலப்படுத்தி வருகிறோம்.

அரசாங்கம் இப்போது பொருளாதாரத்தை ஒரு ஸ்திர மான நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. அது பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும். இதை வருவாயை அதிகரிக்கும் ஒரு நிலைக்கு நாம் கொண்டுவர வேண்டும்-என்றார். (அ)

# சிறைக்காவலரின் வீட்டில் நடந்த விருந்து போதைப்பொருள் கடத்தல்காரர் மரணம்!

கொழும்பு, ஏப். 29

மஹர சிறைச்சாலையில் பணியாற்றும் சிறைக் காவலரின் முல்லேரியா வீட்டில் நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்ட போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் மதுபானம் குடித்து உயிரிழந்துள்ளதாக முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கடத்தல்காரர் சுமேத உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இறந்த போதைப்பொருள் கடத்தல்காரர் 52 கிலோ ஹெரோயின் மற்றும் மூன்று ரி-56 துப்பாக்கிகளுடன் பொலிஸாரால் பிடிக்கப்பட்டதாகவும், நீண்டகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு சமீபத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர் வெல்லம்பிட்டி, வென்னவத்தைப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், சிறைக் காவ லரின் நண்பர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விருந்தில் கலந்துகொண்ட சிறைக் காவலரும் மற்றொரு நபரும் மது குடித்து முல்லேரியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். மற்றொரு நபரும் வென்னவத்தையைச் சேர்ந்தவர். இந்த மது விருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்தது. இந்த விருந்தை சிறைக் காவலரே ஏற்பாடு செய்ததாக விசாரணைகள் தெரிவிக்கின்றன.

விருந்து முடிந்ததும், மூவரும் தூங்கச் சென்றிருந்தனர். கடந்த சனிக்கிழமை அதிகாலையில் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தனர். மூவரையும் முல்லேரியா மருத்துவமனையில் அனுமதிக்க குடியிருப்பாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இறந்தவரின் உடல் பாகங்கள் மற்றும் இரண்டு மதுபானப் போத்தல்களை அரசு பகுப்பாய்வாளரிடம் அறிக்கைக்காக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். போதைப்பொருள் கடத்தல்காரருடன் விருந்து வைத்த சிறைக் காவலர் குறித்து சிறைச்சாலைத் துறை தனி விசாரணையைத் தொடங்கியுள்ளது. (அ)

# அதிகாரத்தை பெறுவதற்கு மக்களிடம் அதிக பொய் கூறுகின்றது எதிர்க்கட்சி!

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 29

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு, நாட்டில் அதிகாரத்தைப் பெறுவதற்காக இந்த நாட்டின் வாக்காளர்களிடம் அதிகம் பொய் சொல்வதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் ஹற்றன் டிக்கோயா நகரசபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஹற்றன் லா அடம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைப் பெறுவதற்காக பொய் சொல்லவில்லை. தற்போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறது.

உள்ளூராட்சி நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்திய திருடர்கள் மற்றும் ஊழல்வாதிகள் புதிய கட்சிகளின் போர்வையில் மீண்டும் வெளிச்சத்துக்கு வந்துள்ளனர். அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# போதைப்பொருள் வைத்திருந்த 331 பேர் பொலிஸாரினால் கைது

கொழும்பு, ஏப். 29

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருட்களுடன் 331 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 98 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 127 பேரும், கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 142 கிராம் 122 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 157 கிராம் 823 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 08 கிலோ 454 கிராம் கஞ்சா போதைப்பொருளும், 02 கிராம் 410 மில்லிகிராம் ஹேஷ் போதைப்பொரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது நோட்டிக்கா அதிசொகுசு பயணிகள் கப்பல்!



கொழும்பு, ஏப். 29

நோட்டிகா அதி சொகுசுப் பயணிகள் கப்பல் நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

தாய்லாந்திலிருந்து 614 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 397 பணியாளர்களுடன் குறித்த கப்பல் வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கப்பல் நேற்று முன் தினம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்த பின்னர் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த கப்பல் இன்று பிற்பகல் இந்தியாவுக்கு புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் இலங்கை செய்த ஒப்பந்தம் என்ன?

### பத்தரமுல்ல சீலரத்ன தேரர் கேள்வி



கொழும்பு, ஏப். 29

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இலங்கை செய்து கொண்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் ஏன் வெளியிடவில்லை என ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

வத்தளையில் நேற்று இடம் பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இவ் வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ரணில் விக்கிரமசிங்கவும் நரேந்திர மோடியும் ஒப்பந்தங் களில் கைச்சாத்திடும்போது மக்கள் விடுதலை முன்னணியி னரே அதற்கு எதிர்ப்பு வெளி யிட்டனர். நாடு முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டினார்கள்.

ஆனால் தற்போது ஜனா திபதி அநுர குமார திஸாநா யக்க மோடியுடன் ஒப்பந்தங் கள் செய்து கொண்டார்.

அவை நாட்டுக்கு வெளிப் படுத்தப்படவில்லை. அதற் கான காரணம் என்னவென நாம் கேட்கிறோம்.

குரங்கு, மயில்களின் கணக் கெடுப்பை செய்தார்கள். அந் தப் பணத்தை ஏழை மக்களுக்கு கொடுத்திருக்கலாம். இப்போது எந்தப் பயனும் இல்லை.

வீடுகளில் வளர்க்கும் நாய் களுக்கு வரி அறவிடப்போவ தாக அமைச்சர் லால் காந்த கூறியுள்ளார். அவ்வாறெனின் நாய்களை வளர்க்கக் கூடாதா?

தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? அமைச்சர் லால் காந்த அதற்கும் விளக்க மளிக்க வேண்டும்-என்றார். (அ)

## கண்டியில் திரண்ட பக்தர்களுக்கு போதிய வசதிகள் வழங்கவில்லை!

### பிவித்துரு ஹெல உறுமய குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 29

கண்டியில் திரண்ட பெருந் திரளான பக்தர்களுக்கு போதிய வசதிகள் செய்துகொடுக்கப்ப டாமை அரசாங்கத்தின் இய லாமையை வெளிப்படுத்துவ தாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம் மன்பில தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-கண்டி தலதா மாளிகை புனித கண்காட்சி இதற்கு முன்னர் நான்கு தடவைகள் இடம்பெற்றுள்ளன.

அப்போதும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்தனர். ஆயினும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

யுத்த காலத்திலும் கண் காட்சி இடம்பெற்றது. பாது காப்பு உறுதிப்படுத்தப்பட்டு மக்கள் சிரமமின்றி தரிசனத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் இம்முறை நெரிச லில் சிக்கி ஆறு பேர் உயிரிழந் துள்ளதுடன் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் வைத்தியசா லைகளில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். கண்டியில் குப்பை கள் நிறைந்து காணப்படுகின் றன. இந்த நிகழ்ச்சி முறையாக ஏற்பாடு செய்யப்படவில்லை. தேர்தலை நோக்கமாகக் கொண்டு சிங்கள பௌத்தர்களின் வாக்கு களைப் பெறும் நோக்கமே அரசாங்கத்துக்கு இருந்தது.

ஆதலால் பொதுமக்களுக் கான வசதிகள் கருத்திற்கொள் ளப் படவில்லை. நான்கு ஐந்து நாட்கள் மக்கள் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டது. அவர்கள் குப்பைகளை வேறு எங்கு கொண்டு செல்ல முடியும். முறையான மலசலகூட வசதிகள் இல்லா மல் பெரும் சிரமத்தை எதிர் நோக்கினார்கள்-என்றார். (அ)

## ஐ.நா. வெசாக் விழாவுக்கு அநுர வியட்நாம் பயணம்!

கொழும்பு, ஏப். 29

ஐ.நா. வெசாக் தின நிகழ் வில் பங்கேற்பதற்காக ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்க மே முதல் வாரத்தில் வியட்நா முக்கு பயணம்மேற்கொள்கின்றார்.

ஐ.நா. வெசாக் தின நிகழ் வுகள் மே 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை மியன்மாரின் ஹோ சி மின் நகரில் நடை பெறுகின்றது.

85 நாடுகளை சேர்ந்த பிரதி நிதிகள் உட்பட 2 ஆயிரத்து 700 விருந்தினர்கள் பங்கேற்க வுள்ளனர் என அறிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கை, இந்தியா, கம் போடியா, நேபாளம், லாவோஸ் ஆகிய நாடுகளில் இருந்து உயர் மட்ட தலைவர்கள் பங்கேற்பார் கள் என தெரிவிக்கப்படுகின் றது.

இலங்கையால் முன்வைக்கப் பட்ட கோரிக்கையின் பிரகா ரமே ஐ.நா. வெசாக் தினம் அனுஷ்டிக் கப்பட்டுவருகின் றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொரலஸ்கமுவ குண்டுத் தாக்குதல் உயர்நீதிமன்றில் மைத்திரி சாட்சியம்

கொழும்பு, ஏப். 29

2008 ஆம் ஆண்டு பொர லஸ்கமுவ பகுதியில் நடந்த தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கில் சாட்சி யாகப் பெயரிடப் பட்ட முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சாட்சியம ளித்தார்.

2008 ஆம் ஆண்டு ஒக்ரோ பர் 10 ஆம் திகதி பொரலஸ் கமுவ பகுதியில் அப்போதைய விவசாய அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவை கொல்லும் நோக்கில் தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு உதவியதாக இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு உயர் நீதி மன்ற நீதியரசர் ஆர்.எஸ்.எஸ். சப்புவிட்ட முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அந்த நேரத்தில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன நீதிமன்றத்தில் சாட்சியாக ஆஜரானார். அதன்படி, வழக் கில் முதல் சாட்சியாகப் பெயரி டப்பட்ட முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவின் சாட்சியத்தைப் பதிவு செய்த பின்னர் அவரை விடுவிக்க உத்தரவிடப்பட்டது. (அ)



## பெண்ணைக் கொன்று சடலத்தை வெட்டி ஆற்றில் வீசிய 2பேர் கைது!

### கொழும்பில் நடந்த கோர சம்பவம்

கொழும்பு, ஏப். 29

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஸ்டேஸ் வீதி, நவகம்புர பிரதே சத்தில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கொலை செய்யப் பட்ட பெண்ணின் இரண்டா வது கணவரும் மருமகனும் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்டேஸ் வீதி, நவகம்புர பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவர் ஏப்ரல் 22 ஆம் திகதியிலிருந்து காணாமல்போயுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

காணாமல்போன பெண் ணின் இரண்டாவது கணவரும் மருமகனும் இணைந்து அவரை கொலை செய்திருக்கலாம் என காணாமல்போன பெண்ணின் மகள் பொலிஸாருக்கு தெரி வித்துள்ளார்.

இதனையடுத்து, விசாரணை களை ஆரம்பித்த பொலிஸார் காணாமல்போன பெண்ணின் வீட்டைச் சோதனையிட்டுள் ளனர்.

சோதனையில், வீட்டினுள் அங்கங்கே இரத்தம் காணப்பட் டுள்ள நிலையில் அங்கு மறைத்து வைத்திருந்த கத்திக ளும் பொலிஸாரால் கைப்பற் றப்பட்டன.

பின்னர் குறித்த வீட்டுக்கு அருகில் உள்ள சி.சி.ரி.வி கமெ ராவை பொலிஸார் சோதனை யிட்டுள்ளனர்.

இதன்போது, காணாமல் போன பெண்ணின் இரண்டா வது கணவரும் மருமகனும் குறித்த வீட்டிலிருந்து மூன்று உரப் பைகளை வெளியே எடுத்துச் செல்லும் காட்சிகள் சில சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளதை பொலிஸார் அவதானித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ ாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேக நபர்கள் இருவரும் காணாமல் போன பெண்ணைக் கொலை செய்து அவரது சடலத்தை துண்டுகளாக வெட்டி உரப் பைகளில் போட்டு நவகம்புர பிரதேசத்தில் உள்ள ஆற்றில் வீசியுள்ளதாக தெரியவந்துள் ளது.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கிராண்ட் பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆற்றில் வீசப்பட்ட பெண்ணின் சட லத்தை தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## மாணவர்களை விட மாணவிகளே பல்கலைக்கு அதிகமாகத் தெரிவு!

கொழும்பு, ஏப். 29

2024 ஆம் ஆண்டு உயர்த ரப் பரீட்சைகளில் ஆண் பரீட் சார்த்திகளை விட பெண் பரீட் சார்த்திகள் அதிக வீதத்தினர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளதாக பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர தெரிவித்துள் ளார்.

பரீட்சை எழுதிய அனைத்து பரீட்சார்த்திகளிலும் 64.73 வீதம் பேர் பல்கலைக்கழக நுழைவுத் தகுதிகளைப் பெற் றுள்ளதாக அவர் தெரிவித்தார். பெண் பரீட்சார்த்திகளில், 71.93 வீதம் பேர் பல்கலைக்க ழக அனுமதிக்குத் தகுதி பெற் றுள்ளனர், அதே நேரத்தில் ஆண் பரீட்சார்த்திகளில் 60.24 வீதம் பேர் பல்கலைக்கழகத் தகுதியைப் பெற்றுள்ளனர்.

மூன்று பாடங்களிலும் தோல்வியடைந்த மாணவர்க ளின் சதவீதத்திலும் இதே போன்ற போக்கு காணப்படுவ தாகவும், ஆண் பரீட்சார்த்திக ளில் 13.87 வீதம் பேரும், பெண் பரீட்சார்த்திகளில் 8.6 வீதம் பேரும் மூன்று பாடங்களிலும் தோல்வியடைந்துள்ளதாகவும் அவர் மேலும் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, இம்முறை உயர்தரப் பரீட்சைப் பெறுபே றுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு



விண்ணப்பிக்க தகுதி பெற்றுள் ளவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ள தாகவும் தெரிவித்தார். இந்த வருடம் குறித்த எண்ணிக்கை 64.73 வீதமாக பதிவாகியுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

இந்த பரீட்சையில் மொத்த மாக 274,361 பரீட்சாத்திகள் தோற்றியதுடன், அதில் 222,774 பேர் பாடசாலை பரீட்சாத்திகளாவர். அதன்படி, 177,588 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுவாக 2021ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றி யவர்களில் 62.89 வீதமான வர்கள் பல்கலைக்கழக அனும திக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றிருந்தனர். இந்த எண்ணிக் கையானது 2022ஆம் ஆண்டில் 63.25 வீதமாகவும், 2023இல் 64.33 வீதமாகவும் அதிகரித்தி ருந்த நிலையில், 2024ஆம் ஆண்டில் 64.73 வீதமாக அதி கரித்துள்ளதாகவும் அவர் சுட் டிக்காட்டினார். (அ)

## பாடசாலை அதிபர் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஏப். 29

பதுளை, அலுகொல்ல-கந் வீதியிலிருந்து பாடசாலை அதி பரொருவர் நேற்றுக் காலை சட லமாக மீட்கப்பட்டார்.

ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டுள்ளார். இவர் சார்னியா தமிழ் வித்தியாலயத்தின் ஆரம் பப் பிரிவின் அதிபராக கடமை யாற்றி வருபவர் என தெரியவ ருகிறது.

கந்தேகெதரவிலிருந்து பது ளைக்குச் சென்று கொண்டி ருந்த தனியார் பயணிகள் பஸ், தியனவல பகுதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளுடன் வீதி ஓரத்தில் ஒருவர் வீழ்ந்து கிடப் பதை பஸ்சாரதி அவதானித்துள்ளார்.

பின்னர் அந்த நேரத்தில் எதிர் திசையில் இருந்து வந்த பஸ்ஸை நிறுத்தி குறித்த நபரை உடனடியாக கந்தேகெதர வைத் தியசாலைக்கு கொண்டு சென்ற தாக தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் வைத் தியர் பரிசோதனை மேற் கொண்டபோது குறித்த நபர் ஏற்கனவே உயிரிழந்துவிட் டதாக தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தமைக்கான கார ணம் விபத்தாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின் றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் மூல வாக்களிப்பு இன்றுடன் நிறைவடைவு

கொழும்பு, ஏப். 29

உள்ளூராராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்றுடன் நிறைவடைகிறது.

வாக்களிப்புக்கான காலம் இனி நீட்டிக்கப்படாது. ஆகவே வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ள சகல அரச உத்தியோகத்தர்களும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராராட்சி மன்றத் அதிகார சபைகளுக்கான உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு எதிர்வரும் மாதம் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் தபால் மூல வாக்களிப்புக்கு இம்முறை 6 இலட்சத்து 47 ஆயிரத்து 495 அரச உத்தியோகத்தர்கள் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய கடந்த 24, 25 ஆம் திகதிகளில் தபால்மூல வாக்கெடுப்பு நடைபெற்ற நிலையில் இன்றும் வாக்கெடுப்பு இடம்பெற உள்ளது. (அ)

# மாகாண சபை தேர்தலை நடத்த காத்திருக்கிறோம்!

## சட்ட ஏற்பாடுகளை பாராளுமன்றம் செய்து தர வேண்டும் என்கிறார் மேலதிக தேர்தல் ஆணையாளர்



கொழும்பு, ஏப். 29

**மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை பாராளுமன்றம் செய்து தர வேண்டும். நாம் இதற்காக தொடர்ந்து காத்துக் கொண்டிருக்கிறோம் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்தார்.**

முன்னைய பாராளுமன்றத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொண்டுவந்த தனி நபர் பிரேரணை போன்ற ஒன்றை தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்து அதனை நிறைவேற்றினால் பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்தும் தாமடைந்து வருகின்ற நிலையில் அதற்கான நகர்வுகள் தொடர்பில் வினவிய போதே மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டினார்.

"ஒவ்வொரு முறையும் மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் இது தொடர்பான சட்ட ஏற்பாட்டை செய்து தருமாறு நாங்கள் கோரிக்கை விடுத்து வருகிறோம். ஒன்று எல்லை நிர்ணய அறிக்கையை நிறைவேற்றுங்கள்.

அல்லது பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதற்கு ஒரு பிரேரணையை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுங்கள்" அன அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனநாயகத்தின் விழுமியங்களை நாங்கள் பார்க்கின்ற போது, அதன் அடிப்படை தேர்தலாகும். இலங்கையில் நடைபெற ஏற்பாடாக இருக்கின்ற ஒவ்வொரு தேர்தலும் மிக முக்கியமானது. ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பன ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். மாகாண சபைத் தேர்தல் நடைபெற வேண்டும். இந்தத் தேர்தலுக்கான காலப்பகுதிகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த 2014ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் இன்னும் நடத்தப்படவில்லை. மாகாண சபைகளின் காலம் முடிவடைந்தாலும் தேர்தல்கள் நடத்தப்படாமல் உள்ளது. இது ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடு. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஆனால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு சட்ட சிக்கல் உள்ளது. 2017ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலை முறைமையை மாற்றி பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள். தொகுதி மற்றும் விகிதாசார முறை என்ற கலப்பு முறைமையை தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அந்த தேர்தல் முறைமைக்கு ஏற்ப தொகுதி எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது. இதில் விநோதமான செயல் என்றால் அந்த அறிக்கையை சமர்ப்பித்த அப்போதைய அமைச்சரே அதற்கு எதிராக வாக்களித்தார்.

பாராளுமன்றத்தில் தற்போது இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன. பழைய முறைமையில் தேர்தலை நடத்த ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அல்லது எல்லை நிர்ணய அறிக்கையை பாராளுமன்றம் ஏற்க வேண்டும். இதில் ஒன்றை விரைவாக செய்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம்.

இந்தப் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் சாதாரன பெறும்பான்மை போதுமாகும். குறித்த பிரேரணையை ஆளுங்கட்சியே செய்ய வேண்டும் என்றில்லை. பாராளுமன்றம் எவரும் கொண்டு வரலாம்-என்றார். (அ)

# தந்தை, மகன் உள்ளிட்ட நான்கு பேர் மின்னல் தாக்கி வைத்தியசாலையில்!

கொழும்பு, ஏப். 29

அநுராதபுரம், அபய வாவியில் நீராடிக்கொண் டிருந்த 4 பேர் மின்னல் தாக் கத்துக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாவியில் நீராடிக்கொண்டிருந்த தந்தை, மகன் உள்ளிட்ட நால்வரே இவ்வாறு மின்னல் தாக்கத்துக்கு இலக்காகியுள்ள நிலையில், வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நால்வரும் சிகிச்சைக்காக அநுராதபுரம் தேசிய வைத்தி ய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சித் தேர்தல் 30 வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, ஏப். 29

2025 உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் தேர்தல் சட்டங்களை மீறியதற்காக இதுவரை மொத்தம் 30 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மார்ச் 3 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை 6:00 மணி வரை இந்தக் கைதுகள் முன்னெடுக்கப்பட்டன. வேட்பாளர்களைத் தவிர, 131 அரசியல் கட்சி ஆதரவாளர்கள் கைது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அதே காலகட்டத்தில் 31 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த காலகட்டத்தில் தேர்தல் சட்டங்களை மீறுவது தொடர்பான 313 முறைப்பாடுகளும், குற்றச் செயல்கள் தொடர்பான 85 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# உடுவர பஹகனுவ பகுதியில் மண்சரிவு இருவர் வைத்தியசாலையில் அனுமதி!

கொழும்பு,ஏப். 29

நிலவும் சீரற்ற வானிலையால் ஹாலிஎல, உடுவர பஹகனுவ பகுதியில் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீடொன்றின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்துள்ளது.

இதன்போது வீட்டின் இடிபாடுகளில் சிக்கிய ஒரு குழந்தையும், ஒரு பெண்ணும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதன்போது வீட்டின் உடைமைகள் அனைத்தும் முற்றாக சேதமடைந்துள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர். அப்பகுதியில் பெய்த கன மழை காரணமாக குறித்த மண் மேடு சரிந்து பிரதேச மக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ஐஸ் போதைப்பொருளுடன் ஓட்டோ திருடியவர் கைது !

கொழும்பு, ஏப்.,29

கொழும்பு - முகத்துவாரம் பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கொழும்பு வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, மேற்படி பிரதேசத்தில் கொழும்பு வடக்கு குற்றத் தடுப்பு பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேகநபர் 10 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேகநபர் 28 வயதுடைய ஹூரீகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணையில், கடந்த 24ஆம் திகதி தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் ஓட்டோ திருட்டுச் சம்பவம் தொடர்பில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் இவரென்பது தெரியவந்தது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முகத்துவாரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தேயிலை தோட்டத்தில் அரச மருந்துகள் மீட்பு !

கொழும்பு, ஏப். 29

அரசாங்க மருத்துவமனையொன்றில் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொகை மருந்துகள் ஹற்றன் ஃப்ரூட்ஹில் தேயிலை தோட்டத்தில் கொட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன்-நுவரெலியா பிரதான வீதியிலிருந்து ஹற்றன் ஃப்ரூட்ஹில் தோட்டத்துக்கு செல்லும் வீதியில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் மருந்துகள் ஒரு தொகை கிடப்பதாக தோட்ட நிர்வாகத்தால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், ஹற்றன் குற்றப்பிரிவு அதிகாரிகளால் விசாரணை நடத்தப்பட்டு, ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்காக மருந்துகள் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கைப்பற்றப்பட்ட மருந்துகள் காலாவதியானவை என்றும், மருந்துகளை இரண்டு பைகளில் வைக்கப்பட்டு தேயிலைத் தோட்டத்தில் கொட்டப்பட்டிருந்ததாகவும், மருந்துகள் விற்பனை தடை என்று எழுதப்பட்ட பல லேபிள்கள் மற்றும் நுவரெலியா பிராந்திய சுகாதார அலுவலகத்தின் பெயர் அச்சிடப்பட்ட மருந்து உறையும் மருந்துகளின் இருப்புக்குள் காணப் பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பிரசன்ன ரணவீரவின் ரிட் மனு தள்ளுபடி!

கொழும்பு, ஏப். 29

களனி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க நிலத்தை சட்டவிரோதமாக கையகப்படுத்திய சம்பவம் தொடர்பில் தன்னை கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் கோரி முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரணைக்கு எடுக்காமலேயே தள்ளுபடி செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் முகமது லாபர் தாஹிர் மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

இந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் சிலர் தற்போது மஹர நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கிழக்கு பல்கலையில் பெரும் நிதி மோசடி!

## விசாரணைக்கு உயர்கல்வி அமைச்சு அறிவுறுத்தல்

மட்டக்களப்பு, ஏப். 29

**கிழக்கு பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் இடம்பெற்றுள்ள பெரும் நிதி மோசடிகள் குறித்து உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர்கல்வி அமைச்சுக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தலையடுத்து உயர்கல்வி அமைச்சு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.**

குறித்த பல்கலைக்கழகத்தில் கடந்த காலத்தில் மாணவர்களுக்கு வழங்கிய மஹாபொல புலமைப்பரிசில், விளையாட்டுத்துறை, ஆய்வு மகாநாடுகள் மற்றும் அபிவிருத்திகளில் பெரும் நிதி மோசடி இடம் பெற்றுள்ளதாக பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள் ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டுக்கமைய ஜனாதிபதி செயலகம் உயர்கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தல் வழங்கியதையடுத்து இந்த நிதி மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவுக்கு உயர்கல்வி அமைச்சு கோரியுள்ளதையடுத்து இது தொடர்பில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# தேசிய மக்கள் சக்தியினர் சம்மாந்துறையில் பிரசாரம்




சம்மாந்துறை, ஏப். 29

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேச சபைக்கான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரப் பணிகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டார். (எ)

# மாற்றுத்திறனாளிகளின் சுய உதவி குழுக் கூட்டம்

தம்பலகாமம், ஏப். 29

மாற்றுத் திறனாளிகளின் சுய உதவிக்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. சிறீபதி வழிகாட்டலில் பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது, சுய உதவி குழுக்களை எவ்வாறு வலுப்படுத்துவது, அவர்களின் வருமான மட்டத்தை எவ்வாறு அதிகரிப்பது மற்றும் மாற்றுத் திறனாளி சமூகத்தின் மனித உரிமைகள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

மேலும், சுய உதவி குழுக்களின் கடந்த கால செயல்பாடுகள் மற்றும் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

எதிர்வரும் நாட்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ முகாம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் உத்தியோகத்தர் கூறினார்.

இதில் சமூக சேவைகள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் த.பிரணவன், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் நஸ்ரின் திலானி மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)



பாடல் பெற்றதும் வரலாற்று புகழ்மிக்கதுமான திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்த் திருவிழாவின் காட்சி...!

(படம்: - பா. விபூஷிதன்)

# எருவில் வயலிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஏப். 29

மட்டக்களப்பு , எருவில் கிராமத்தில் உள்ள வயல் பகுதியிலிருந்து கடந்த சனிக்கிழமை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் எருவில் கிராமத்தை சேர்ந்த 44 வயதுடைய இரத்தினசிங்கம் உத்தமன் என அடையாளம் காணப்பட்டார்.

அப்பகுதியில் உள்ள அவரது வயலில் வேளாண்மையை பார்ப்பதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்றதுடன் துவிச்சக்கர வண்டியை குளக்கட்டில் விட்டுவிட்டு வயலுக்குள் இறங்கி தனது வேளாண்மைச் செய்கையை பார்வையிட்ட நிலையில் அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி வி. ஆர். மகேந்திரன், சடலத்தை பார்வையிட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார்.(எ)

# மட்டு. மகாஜன கல்லூரி மாணவி அபிசா கலைப்பிரிவில் முதலிடம்

மட்டக்களப்பு, ஏப். 29

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகின.

இந்த நிலையில், கலைப்பிரிவில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி மாவட்டத்தில் முதல் இடத்தை பெற்றுள்ளது.குணராஜா அபிசா என்ற மாணவி அளவையியல், மனைப் பொருளியல்



மற்றும் தமிழ் ஆகிய பாடங்களில் ஏ சித்தி பெற்று மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார். (எ)

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மருத்துவத் துறையில் முதலிடம்

கல்முனை, ஏப். 29

க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) அம்பாறை மாவட்ட ரீதியில் மருத்துவத் துறையில் முதலாம் மற்றும் நான்காம் இடங்களையும், உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பத்தில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளை பெற்று சாதித்துள்ளது.

அத்துடன், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியிலிருந்து 10 மாணவிகள் மருத்துவப் பீடத்துக்கும், 03 மாணவிகள் பொறியியல் பீடத்துக்கும் ,உயிரியல் முறைமைகள் தொழில்நுட்ப பீடத்துக்கு 16 மாணவிகளும், வர்த்தக பீடத்துக்கு 12 மாணவிகளும், முகாமைத்துவ பீடத்துக்கு 08 மாணவிகளும் கலைப்பீடத்துக்கு 48 மாணவிகளும் தெரிவாகி கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். (எ-06)

# தென்கிழக்கு பல்கலை. இஸ்லாமிய கற்கைகள் பீடம் புனர்நிர்மாணம்

ஒலுவில், ஏப். 29

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றில் முதன் முறையாக முழுக்க முழுக்க மாணவர்களின் பங்களிப்புடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தின் பகுதிகளை பல்கலைக்கழக நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு மாணவப் பேரவையின் தலைவர் ஆர். ஹனாஸ் தலைமையில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் நேற்று நடைபெற்றது.இந்த



நிகழ்வில் பிரதம விருந் தினராக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் யூ. எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட பகுதிகளை திறந்து வைத்ததுடன் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலும் பங்கேற்றார். (ஏ-06)

# உயிரியல் விஞ்ஞான பிரிவில் மாணவி மின்ஹா முதலிடம்

திருகோணமலை, ஏப். 29

வெளியான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான பிரிவில் திருகோணமலை, கிண்ணியா அல்ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மாணவி எம். என். மின்ஹா மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ளார். இதே வேளை, அந்தப் பாடசாலையின் மற்றுமொரு மாணவி எம். ஏ. எவ். இனாசிரின் மாவட்ட மட்டத்தில் ஆறாம் இடத்தை பெற்று மருத்துவத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



இந்தப் பாடசாலைக்கு உயர்தரத்தில் விஞ்ஞான பிரிவுக்கான அனுமதி கிடைத்து முதல் தடவையிலே, இந்த மாணவிகள் இவ்வாறு சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

விஞ்ஞான பிரிவில் முதல் தடவையாக 13 மாணவிகள் பரீட்சை எழுதி, அதில் 10 மாணவிகள் சித்தியடைந்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாமீது தாக்குதல் நடத்த 130 அணு ஆயுதங்கள் தயார்!

## சிந்து நதி நீரை நிறுத்தினால் போருக்கு தயாராக வேண்டும் - பாகிஸ்தான் மிரட்டல்



லாகூர், ஏப். 29

**இந்தியா மீது தாக்குதல் நடத்த 130 அணு ஆயுதங்கள் தயாராக உள்ளன என்று பாகிஸ்தான் அமைச்சர் ஹனிப் அப்பாசி தெரிவித்துள்ளார். சிந்து நதி நீரை நிறுத்தினால் இந்தியா போருக்குத் தயாராக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

காஷ்மீரில் உள்ள பஹல்காம் பகுதியில் கடந்த 22ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது.

அதில் முக்கியமாக சிந்து நதி நீர் ஒப்பந்தத்திலிருந்து இந்தியா விலகியுள்ளது. இந்தியாவின் இந்த நடவடிக்கை போருக்கான அறிவிப்பு என பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை, பஹல்காம் தாக்குதல் தொடர்பில் நடுநிலையான, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய விசாரணைக்கு தயார் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்தியா மீது தாக்குதல் நடத்த அணு ஆயுதங்கள் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் அமைச்சர் ஹனிப் அப்பாசி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சிந்து நதி நீரை இந்தியா நிறுத்தினால் அந்த நாடு போருக்குத் தயாராக வேண்டும். நம்மிடம் உள்ள இராணுவ ஆயுதங்களும் ஏவுகணைகளும் பார்வைக்கு வைக்க அல்ல. நாட்டின் எந்தெந்த பகுதிகளில் நாம் அணு ஆயுதங்கள் மறைத்து வைத்துள்ளோம் என்று யாருக்கும் தெரியாது.

நம்மிடம் உள்ள அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைகள் அனைத்தும் இந்தியாவை நோக்கி மட்டுமே உள்ளன. இந்தியாவை தாக்க 130 அணு ஆயுதங்கள் தயாராக உள்ளன- என்றார். (எ)

# 54 பயங்கரவாதிகள் சுட்டுப்படுகொலை!

## பாகிஸ்தானில் தொடரும் வேட்டை

பெஷாவர், ஏப். 29

பாகிஸ்தானில் 54 பயங்கரவாதிகளை இராணுவம் சுட்டுப்படுகொலை செய்தது.

அண்டை நாடான தலிபான்கள் ஆளும் ஆப்கானிஸ்தானிலிருந்து தங்கள் நாட்டுக்குள் ஊடுருவ முயன்ற 54 பயங்கரவாதிகளை சுட்டுக்கொன்றதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வடமேற்கு கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள வடக்கு வசிரிஸ்தான் அருகே இடம்பெற்றது. அங்கு அதிக எண்ணிக்கையிலான பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் இரவு ஊடுருவினர். அப்போது, அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த பாகிஸ்தான் இராணுவத்தினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது.

இதில், 54 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடர்ந்து, அந்தப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொல்லப்பட்டவர்கள் "குவாரிஜ்" என்று உளவுத்துறை அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளதாக பாகிஸ்தான் இராணுவத்தின் ஓர் அறிக்கை கூறுகிறது. "குவாரிஜ்" என்ற சொல் தலிபான்களை விவரிக்க பாகிஸ்தான் அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகிறது. (எ)

## விசாரணையில் ரஷ்யா, சீனா பங்கேற்கவேண்டும்!

லாகூர், ஏப். 29

காஷ்மீரின் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் நடுநிலையான விசாரணைக்குத் தயார் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இதேவேளை, விசாரணையில் ரஷ்யா, சீனா பங்கேற்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது.

உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணையை சர்வதேச நாடுகள் நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து ரஷ்ய செய்தி நிறுவனத்துக்கு பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் குவாஜா ஆசிப் கூறுகையில், “இந்த நெருக்கடியில் ரஷ்யா, சீனா அல்லது மேற்கத்திய நாடுகள் ஒரு மிகமிக நேர்மறையான பங்களிப்பை செய்ய முடியும் என நினைக்கிறேன் எனவும் கூறினார். (எ)

# ஈரான் துறைமுகத்தில் விபத்து இதுவரை 25 பேர் உயிரிழப்பு!

தெஹ்ரான், ஏப். 29

ஈரான் துறைமுகத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி இதுவரை 25 பேர் உயிரிழந்தனர். ஈரானின் பாந்தர் அப்பாஸ் நகரில் துறைமுகம் உள்ளது. இது ஈரானின் மிகப் பெரிய வர்த்தக துறைமுகமாகும். இந்தத் துறைமுகத்தில் கண்டெய்னர்கள் நிறுத்தி வைத்திருந்த பகுதியில் மிகப் பெரிய வெடி விபத்து ஏற்பட்டது.

எரிபொருள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கண்டெய்னர்களை சரிவர கையாளாததால் இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்த வெடி விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்தது. மேலும், இந்தச் சம்பவத்தில் 750 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த வெடி விபத்து குறித்து அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்திய பயணத்தை தவிர்க்க கனடா மக்களுக்கு அறிவிப்பு

ரொரண்டோ, ஏப். 29

இந்திய பயணத்தை தவிர்க்குமாறு கனடா தனது நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.


இதேவேளை, ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத அச்சுறுத்தல் நீடிப்பதாக கனடா தெரிவித்துள்ளது.

ஜம்மு - காஷ்மீரில் உள்ள பஹல்காம் பகுதிக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகள் மீது கடந்த 22ஆம் திகதி பயங்கரவாதிகள் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினர். இதில், 26 பேர் பரிதாபமாக பலியாகினர். இந்தத் தாக்குதல் சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது. அதே சமயம் இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு இந்தியா மட்டுமல்ல பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து, பஹல்காம் உள்ளிட்ட ஜம்மு காஷ்மீரின் பல்வேறு பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்காணிப்பில் இந்திய இராணுவப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பஹல்காம் தாக்குதலை அடுத்து ஜம்மு காஷ்மீர் பயணத்தை தவிர்க்குமாறு கனடா தனது நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. அட்டாரி வாகா எல்லை மூடப்பட்டதை சுட்டிக்காட்டி இந்தியா - பாகிஸ்தான் எல்லைப்பகுதி கொந்தளிப்புடன் உள்ளதால் பயணத்தை தவிர்க்குமாறு கனடா எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ)

# பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை!

## சீனாவுக்கு எதிராக களமிறங்கிய அமெரிக்கா



மணிலா, ஏப். 29

பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை அமெரிக்கா நிறுவியுள்ளது.

பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள தென்சீனக் கடல் பகுதி முழுமைக்கும் சீனா உரிமை கொண்டாடுகிறது. அத்தோடு பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனே உள்ளிட்ட நாடுகளும் அதற்கு உரிமை கோருகின்றன. இந்த விவகாரத்தால் அங்கு செல்லும் பிலிப்பைன்ஸ் படகுகள் மீது சீனக் கடற்படையினர் அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றனர். இதனால், இரு நாடுகளுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்படுகிறது.

இதில் பிலிப்பைன்ஸுக்கு ஆதரவாக அமெரிக்கா களமிறங்கியது. அதன் ஒருபகுதியாக இரு நாடுகளும் பிலிப்பைன்ஸில் கூட்டுப்போர் பயிற்சியை நடத்தி வருகின்றன. இந்த நிலையில் அமெரிக்க இராணுவம் முதன் முறையாக கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் நிறுத்தியுள்ளது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. (எ)

# ஏமனில் அமெரிக்கா வான்வழி தாக்குதல்

சனா, ஏப். 29

ஏமனில் அமெரிக்கா மீண்டும் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் நீடித்து வருகிறது.

இந்தப் போரில் 51 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனிடையே இஸ்ரேல்-ஹமாஸ் இடையே யான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவளித்து வருகின்றனர்.

ஹமாஸுக்கு ஆதரவு வழங்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அதேபோல், செங்கடல் பகுதியில் பாதுகாப்பு, ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அமெரிக்க ட்ரோன்கள், போர்க் கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல், அமெரிக்கா அவ்வப்போது தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இந்த நிலையில், ஏமனில் நேற்று அதிகாலை அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது. ஏமனின் தலைநகர் சனாவில் உள்ள அல்-ஷபன் மற்றும் பனி அல் ஹரித் ஆகிய 2 பகுதிகளில் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 10 பேர் படுகாயமடைந்தனர்.

செங்கடல் தாக்குதலுக்குப் பதிலடியாக ஏமன் மீது அமெரிக்க விமானப்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதியாக் டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்றது முதல் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6 விக்கெட் வித்தியாசத்தில்

# டில்லி அணியை வீழ்த்தி ஆர். சி. பி. அணி வெற்றி

புதுடில்லி, ஏப். 29

டில்லிக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் பெங்களூரு (ஆர்.சி.பி.) அணி அசத்தல் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் டில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இந்தப் போட்டியில் டில்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய அபிஷேக் போரல், பாப் டு பிளஸ்சிஸ் இருவரும் சிறப்பாக விளையாடி அணிக்கு நல்ல தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தனர்.

இருவரும் முறையே 28 மற்றும் 22 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களமிறங்கிய கருண் நாயர் 4 ஓட்டங்களில் வெளியேற அடுத்து வந்த கே.எல். ராகுல் அதிரடியாக விளையாடி 41 ஓட்டங்கள் எடுத்தார்.அக்சர் பட்டேல் 15 ஓட்டங்களிலும், அசுதோஷ் 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 34 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் டில்லி அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 162 ஓட்டங்கள் எடுத்தது. பெங்களூரு அணி சார்பில் அதிகபட்சமாக புவனேஷ்வர் குமார் 3 விக்கெட்களும், ஜோஷ் ஹேசில்வுட் 2 விக்கெட்களும் வீழ்த்தினர். இதையடுத்து 163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூரு அணி துடுப்பெடுத்தாடியது.



தொடக்கத்தில் ஜேக்கப் பெத்தேல் 12 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். பின்னர் படிக்கல் ஓட்டமின்றியும் ரஜத் படிதார் 6 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தனர் .

தொடர்ந்து விராட் கோலி, குருணல் பாண்டியா இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர் . பந்துகளை பௌண்ட்ரி , சிக்ஸருக்கு பறக்க விட்டனர் . நிலைத்து ஆடிய இருவரும் அரைச்சதம் அடித்தனர். பின்னர் விராட் கோலி 51 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து டிம் டேவிட் பொறுப்புடன் விளையாடி ஓட்டங்கள் குவித்தார் .

இறுதியில் பெங்களூரு அணி 18. 3 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 165 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது. (எ)

## 54 ஓட்டம் வித்தியாசத்தில் மும்பை அசத்தல் வெற்றி



மும்பை, ஏப். 29

லக்னோ அணிக்கு எதிரான போட்டியில் 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அசத்தல் வெற்றி பெற்றது.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் 2 லீக் ஆட்டங்கள் நடைபெற்றன. மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற 45ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின.

இதில் மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ரியான் ரிக்கல்டன் - ரோஹித் சர்மா தொடக்க வீரர்களாக களமிறங்கினர். இதில் ரோஹித் சர்மா 12 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ரியான் ரிக்கல்டன் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தார். 32 பந்துகளில் 58 ஓட்டங்கள் குவித்த அவர், 9ஆவது ஓவரில் திக்விஜேஷ் ரத்தி வீசிய பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். நிதானமாக ஆடிய வில் ஜாக்ஸ், 29 ஓட்டங்கள் எடுத்த நிலையில், பிரின்ஸ் யாதவ் பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்த சூர்யகுமார் யாதவ் 28 பந்துகளில் 54 ஓட்டங்கள் குவித்தார். திலக் வர்மா 6 ஓட்டங்களிலும், ஹர்திக் பாண்டியா 5 ஓட்டங்களிலும் விக்கெட்டை இழந்தனர். இறுதி ஓவர்களில் அதிரடி காட்டிய நமன் திர்(25 ஓட்டங்கள்) மற்றும் கார்பின் போஷ்(20 ஓட்டங்கள்) அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

இதையடுத்து மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்களை இழந்து 215 ஓட்டங்கள் எடுத்தது. லக்னோ அணியில் அதிகபட்சமாக மயங்க் யாதவ் மற்றும் ஆவேஷ் கான் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். தொடர்ந்து 216 ஓட்டங்கள் என்ற சவாலான இலக்கை நோக்கி லக்னோ அணி களமிறங்கியது.

தொடக்க வீரர்களாக மிட்செல் மார்ஷ்-மார்க்ரம் களமிறங்கினர். இதில் மார்க்ரம் 9 ஓட்டங்களில் பும்ராவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நிக்கோலஸ் பூரன் 15 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 1 பௌண்ட்ரி விளாசி அதிரடி காட்டினார். இந்த நிலையில், 27 ஓட்டங்களில் நிக்கோலஸ் பூரன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

ரிஷப் பண்ட் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். ஆயுஷ் பதோனி(35 ஓட்டங்கள்) நிதானமாக ஆடி ஓட்டங்கள் சேகரிப்பில் ஈடுபட்டார். ஆட்டத்தின் 16ஆவது ஓவரில் டேவிட் மில்லர்(24 ஓட்டங்கள்), அப்துல் சமத்(2ஓட்டங்கள்) மற்றும் ஆவேஷ் கான்(0) ஆகிய 3 விக்கெட்களை வீழ்த்தி பும்ரா அசத்தினார்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 161 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் பும்ரா அதிகபட்சமாக 4 விக்கெட்களை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார். இதன் மூலம் மும்பை அணி 12 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு முன்னேறியது. (எ)

## மட்ரிட் ஓபின் ரென்னிஸில் நோர்வே வீரர் ரூட் வெற்றி

மட்ரிட், ஏப். 29

மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடரில் நோர்வே வீரர் காஸ்பர் ரூட் வெற்றி பெற்றார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நோர்வேயின் காஸ்பர் ரூட் , அமெரிக்காவின் செபாஸ்டியன் கோர்டாவுடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய காஸ்பர் ரூட் 6-3 மற்றும் 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு (4ஆவது சுற்று) தகுதி பெற்றுள்ளார். (எ)

## பார்சிலோனா சம்பியன்




செவில்லி, ஏப். 29

இறுதி ஆட்டத்தில் மூன்று கோல்கள் அடித்த பார்சிலோனா அணி சம்பியனானது.கோபா டெல் ரே எனப்படும் ஸ்பானிஷ் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் இறுதி ஆட்டம் ஸ்பெயினின் செவில்லி நகரில் நடைபெற்றது. இதில் முன்னாள் சம்பியன்களான பார்சிலோனா, ரியல் மட்ரிட் ஆகிய அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் வழக்கமான நேரம் முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலை நீடித்ததால், வெற்றி தோல்வியை தீர்மானிக்க கூடுதலாக 30 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதில் பார்சிலோனா வீரர் ஜூல்ஸ் கவுண்டே 116ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.முடிவில் பார்சிலோனா 3-2 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட்டை வீழ்த்தி 32ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. (எ)

## 4000 ஓட்டம் குவித்து சூர்யகுமார் சாதனை



மும்பை, ஏப். 29

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் சூர்யகுமார் யாதவ் 4000 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்துள்ளார்.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் மாலை மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற 45ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில், 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வீரர் சூர்யகுமார் யாதவ் 34 ஓட்டங்கள் எடுத்த போது ஐ.பி.எல். தொடரில் 4 ஆயிரம் ஓட்டங்களை (145 இன்னிங்ஸ்களில்) கடந்தார். இதேவேளை 2,714 பந்துகளை சந்தித்த சூர்யகுமார் 4 ஆயிரம் ஓட்டங்களை அதிவேகமாக எட்டிய 3ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றார். முதல் இரு இடங்களில் கிறிஸ் கெய்ல் (2,658 பந்து), ஏபிடி வில்லியர்ஸ் (2,658 பந்து) ஆகியோர் உள்ளனர். (எ)

## முத்தரப்பு தொடரில் இந்திய அணி வெற்றி

கொழும்பு, ஏப். 29

மகளிர் முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியை வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்றது. இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய மகளிர் அணிகள் பங்கேற்றுள்ள ஒரு நாள் கிரிக்கெட் தொடர் கொழும்பில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும்.

முதலாவது லீக் ஆட்டத்தில் இந்திய அணி, இலங்கையை சந்தித்தது. போட்டிக்கு முன்பாக சுமார் 2 மணி நேரம் மழை கொட்டி தீர்த்ததால் ஆட்டம் 39 ஓவர்கள் கொண்டதாக குறைக்கப்பட்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 38.1 ஓவர்களில் 147 ஓட்டங்களுக்குச் சுருண்டது.



தொடர்ந்து விளையாடிய இந்திய அணி 29.4 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து149 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் எளிதில் வெற்றி பெற்றது. பிரதிகா ராவல் 50 ஓட்டங்களுடனும், ஹர்லீன் தியோல் 48 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். ஸ்மிருதி மந்தனா 43 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பாப்பரச...

இந்த மாநாடு வத்திக்கானில் சிஸ்டைன் தேவாலயத்தில் நடைபெறும். மாநாடு நடைபெறும் நாட்களில் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## எனக்கு நீதி...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி முறைகேடு தொடர்பில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் அவர் நேற்று முன்னிலையாகி வாக்கு மூலம் வழங்கினார். அதன் பின்னர் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் 10 ஆம் திகதி நான் வெளியிட்ட கருத்து தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தருமாறு ஏப்ரல் 11 ஆம் திகதி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு எனக்கு அறிவித்திருந்தது.

நான் சித்திரை புத்தாண்டை கொண்டாடுகிறேன். அரச தரப்பினர் அதனைக் கொண்டாடுகிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அத்துடன் எனது சட்டத்தரணி வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார்.

எவ்வாறெனினும் 21 ஆம் திகதி மற்றுமொரு கடிதம் கிடைக்கப் பெற்றது. அதில் 23 ஆம் திகதி வருகை தருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அப்போதும் எனது சட்டத்தரணி உள்நாட்டில் இருக்கவில்லை. இம்மாதம் 27 ஆம் திகதி வரை எனது சட்டத்தரணி இங்கு இல்லையென அறிவித்திருந்தும் கூட அவ்வாறான கடிதம் அனுப்பப்பட்டமை தொடர்பில் நான் வியப்படைந்தேன்.

நாளாந்தம் பல்வேறு நபர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். எனினும் நான் வரும்போது மாத்திரம் ஊடகங்களுக்கு தெரியப்படுத்துகிறீர்கள் என ஆணைக்குழுவிடம் இன்று நான் கூறினேன்.

அத்துடன், ஆணைக்குழுவில் உள்ள ஆவணங்கள் வெளி நபர்களுக்கு காண்பிப்பதற்கும் நான் எதிர்ப்பு வெளியிட்டேன். யாருக்கு வெளியிட்டோம் என அவர்கள் கேட்டார்கள்.

ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி மட்டக்களப்பில் நடந்த கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதுபற்றி கூறியிருக்கிறார். அவ்வாறெனின் அவர் கடிதத்தை வாசித்திருக்கிறார். அவர் பொய் கூற முடியாதல்லவா? அவ்வாறெனின் அவர் அந்த ஆவணங்களை பெற்றுக் கொள்கிறார் என்பது தெளிவாகிறது.

எனக்கு நியாயம் நிலைநாட்டப்படுமா என்பது தெரியாது. ஆதலால் எனது சட்டத்தரணிகளுக்கு ஆணைக் குழுவை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் தருமாறு கோரினேன்.

ஆணைக்குழுவினால் கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் பதில் வழங்கினேன்.

எனக்குத் தெரிந்த வகையில் ஒதுக்கீட்டு சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசாங்கத்தினால் மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.

செலவு செய்யக் கூடிய ஆகக்கூடுதலான தொகை என்னவென்பது ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதேபோல் எந்தெந்த பிரிவுகளுக்கு அவை செலவிடப்படுகிறது என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

மேலும், சட்டத்தின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியை நிலையான வைப்புகளில் பேண முடியாது. அவை செலவு செய்யப்படவேண்டும்.

எந்தவொரு திட்டத்துக்கும் செலவிடப்படும் நிதி பொருளாதாரத்தை சென்றடைகிறது. அவ்வாறு சென்றடையும் போதுதான் பொருளாதாரம் வளர்ச்சி பெறுகிறது.

ஒதுக்கப்படும் நிதி நிலையான வைப்புகளில் பேணப்பட்டால் என்னவாகும்?

ஆதலால் நாம் வழிமுறைகளை பின்பற்றியுள்ளோம். இது குறித்து நான் ஆணைக்குழுவிடம் கூறினேன் - என்றார். (அ)

## யாழில் மின்னல்...

பிரிவில் 1 குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/301 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 3பேரும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/426 கிராம சேவகர் 1 குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்-என்றார். (அ-05)

## அதீத...

கிழமை முதியவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு ஒப்படைத்தனர்.

மரண விசாரணையில் அதீத வெப்பம் காரணமாக உடலில் நீரிழப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மத்தள விமான...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கு பல்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். மத்தள விமான நிலையத்தின் ஊடாக கடந்த காலங்களில் பெரும் எண்ணிக்கையிலானோர் வருகை தந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுத்தந்த வரிச் சலுகையின் பிரகாரம் சுற்றுலா பயணிகளை மத்தல விமான நிலையத்தின் ஊடாக அழைத்து வர ஏற்பாடுகளை செய்தோம். அதனடிப்படையில் குளிர் காலத்தில் ரஷ்யாவிலிருந்து ஏராளமானோர் வருகை தந்தனர்.

எனினும் அந்த வருமானத்தை தவிர்த்து தற்போது விமான நிலையத்தை விற்பனை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலும் அவ்வாறான திட்டமிடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது ஜனாதிபதி அநுர குமாரவின் காலத்திலும் விற்பனை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதற்கு அரசாங்கம் காரணமல்ல. அதிகாரிகள் தான் மூளைச் சலவை செய்து இந்த விடயத்தை முன்னெடுக்கிறார்கள். -என்றார். (அ)

## நாட்டில் நடந்த...

ஆட்சிக்கு வந்து ஏழு மாதங்கள் கடந்துள்ளன. ஆனால், அரசாங்கம் இன்னமும் திருடர்களை பிடிக்கவும் இல்லை. என்ன திருட்டு இடம்பெற்றுள்ளது என கூறவும் இல்லை. திருட்டு இடம்பெற்றுள்ளது எனக் கூறுவதற்கு முன்னராக இந்த நாட்டில் இடம்பெற்றுள்ள திருட்டு என்ன என்பது தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அதிவேக வீதிகள், கட்டடங்கள் என்பவற்றின் ஊடாக ஊழல் இடம்பெற்றுள்ளதாக கூறினார்கள். ஆகவே அவற்றை வெளிப்படுத்த வேண்டும். நாட்கள் பல கடந்துள்ள நிலையிலும் கூட அவற்றை வெளிப்படுத்தாமையின் பின்னணியில் ஜனாதிபதி கூறிய விடயங்கள் பொய் என்பதே தெளிவாகின்றது.

மின், எரிபொருள் மற்றும் எரிவாயு கட்டணங்களைக் குறைப்பதாக கூறினர். ஆனால் அந்த விடயங்கள் தற்போது பொய்யாகியுள்ளன. ஆட்சியை கைப்பற்றுவதற்காக ஜனாதிபதி தலைமையிலான அணியினர் கடந்த ஆட்சியாளர்கள் ஊழலில் ஈடுபட்டதான போலிப் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர். அதன் ஊடாக ஆட்சியை கைப்பற்ற முடிந்தது.

ஆகவே நாட்டில் இடம்பெற்றுள்ள ஊழல் என்ன என்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்லவேண்டாம் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். அதே போன்று நாட்டின் தேசிய பாதுகாப்பும் வீழ்ச்சி கண்டுள்ளது-என்றார். (அ)

# ரஷ்ய தூதரகம் முன்பாக பதற்றம்

கொழும்பு, ஏப். 29

கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகத்தில் கைவிடப்பட்ட பொதியொன்று காரணமாக நேற்று பதற்ற நிலை உருவானது.

தூதரகத்துக்கு வந்த வெளிநாட்டவர் ஒருவர் மடிக்கணினி அடங்கிய பையொன்றை கொடுத்துவிட்டு உடனடியாக அங்கிருந்து சென்றுள்ளார். இதனால் பதற்றமடைந்த தூதரக அதிகாரிகள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார், பொலிஸ் அதிரடிப்படையினர், குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அங்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

பொலிஸ் மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் குறித்த மடிக்கணினியை மீட்ட கறுவாத்தோட்ட பொலிஸார் அதனை கையகப்படுத்தியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## தையிட்டி...

இதேவேளை, கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரசுத் தரப்பினரின் பரப்புரை கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, போரின்போது படையினரால் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களுக்கு சொந்தமான அனைத்து காணிகளையும் விடுவித்து மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

தையிட்டி விகாரையைச் சுற்றியுள்ள ஏனைய காணிகளை விடுவிப்பதன் மூலம் தையிட்டி விகாரை விவகாரத்தில் அரசுக்கு எதிராகக் கிளம்பியுள்ள எதிர்ப்பு அலைகளைச் சற்று தணிக்கச் செய்யலாம் என்றும், தேர்தலில் வடக்கு மக்களின் நம்பிக்கையைப் பெறலாம் என்றும் அரசு தரப்புக் கருதுவதாகத் தெரிகின்றது. (அ)

## எமது போராட்ட...

உறவுகள் சங்கத்தின் தலைவி அமலநாயகி அமல்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன்போது தலைவராக மீண்டும் திருமதி அமலநாயகி அமல்ராஜ, செயலாளராக ராஜன் தேவகி தெரிசெய்யப்பட்டதுடன் பொருளாளராக ரவிச்சந்திரன் வினோஜியா தெரிவுசெய்யப்பட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி-

எங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கேட்கவேண்டிய கால சூழ்நிலையிலிருக்கின்றோம். தற்போதுள்ள ஆட்சி மாற்றத்திலும் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

புதிய ஆட்சி வந்ததும் ஏதோ புதிய ஆட்சிவந்துள்ளது எங்களுக்கு அனைத்தும் கிடைத்துவிட்டது என்று நீங்கள் ஒருபோதும் கனவு காணவேண்டாம்.

கடந்தகால ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றி எவ்வாறு எமது இனத்தை அழித்தார்களோ அதனைவிட படுமோசமான அரசியல் வியூகத்திற்குள்ளேயே நாங்கள் தற்போது நின்றுகொண்டிருக்கிறோம்.

காணாமல்ஆக்கப்பட்டோர் விடயப் பரப்புக்குள் பல விடயங்களைச் செய்யப் போகின்றோம், உண்மையை கண்டறியப்போகின்றோம், நியாயங்களைச் சொல்வோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் மூன்று தேர்தல்களை நடத்தியது மட்டுமே வேலைத்திட்டமாக இருந்ததே தவிர காணாமல்ஆக்கப்பட்டவர்கள் விடயத்தை -வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்னையை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்துக்குள் திட்டமிட்டு புகுத்தி தமது போராட்டத்தை இல்லாமல்செய்யும் முயற்சியை திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றனர்- என்றார். (அ)

## சீனாவின்...

எனினும் அவரின் வருகைக்கான திகதி மற்றும் கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் தொடர்பாக இன்னும் திட்டமிடப்படவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சீனாவுக்கு சென்றிருந்தபோது, இலங்கை - சீனா இடையிலான வர்த்தக உடன்படிக்கையை விரைவுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், சீனாவின் வர்த்தகத் துறை அமைச்சர் நாட்டுக்கு வருகைதரும் போது, இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. (அ)

## படுகொலையான...

முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபி முன்பாக நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் , தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டு சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அதனை தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளரான தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட பின்னர் பாராளுமன்றத்துக்கு அருகில் படுகொலையான நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்தவேளை கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். (அ)

## அநுர அரசாங்...

தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் பின்னடைவைச் சந்தித்திருக்கக்கூடிய தீர்க்கமானதொரு சூழ்நிலையில் உள்ளோம். உள்ளூராட்சி மன்ற தேர்தல் எமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக அமைந்துள்ளது. அதற்கு காரணம் இந்த தேர்தல் ஊடாக அரசியல் மாற்றமொன்றை மேற்கொள்ளக் கூடிய நிலை காணப்படுகின்றது.

இந்த தேர்தல் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான தேர்தல் அல்ல எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால், இந்த தேர்தலில் நீங்கள் அளிக்கப்போகும் வாக்குகள் தற்போதைய ஜனாதிபதியின் பயணத்தை குறுகிய காலத்துக்கு மட்டுப்படுத்தும் வகையில் அமையப்பெறும்.

அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர். காரணம் அரசாங்கத்தின் அமைச்சர் தாம் கூறிய பொய்கள் இருப்பின் அவற்றை கூறுமாறு மக்களுக்கு சவால் விடுக்கிறார். ஆனால், அரசாங்கம் பல பொய்களை நாட்டு மக்களுக்கு உரைத்துள்ளது. மின் கட்டணம் , எரிபொருள் எரிவாயு என்பவற்றின் விலையை குறைப்பதாகக் கூறினர். ஆனால் அந்த விடயத்தை மேற்கொள்ளவில்லை. அவ்வாறாக பல வாக்குறுதிகள் இன்னமும் கூட நிறைவேற்றப்படவில்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அரசாங்கத்தின் வருமானம் 22 வீதத்தினால் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 26

கடந்த ஜனவரி மாதம் அரசாங்கத்தின் வருமானம் 22 வீதத்தினால் உயர்ந்துள்ளதாக மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஜனவரி மாதத்தில் அரசாங்க வருமானம் 346.58 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 283.13 பில்லியனாக காணப்பட்டது. (அ)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்கினார் ரணில்

கொழும்பு, ஏப். 29

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகி வாக்குமூலம் வழங்கினார்.

ஊவா மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில், பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவின் நிதி முறைகேடு வழக்கு தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துகள் குறித்து வாக்குமூலம் அளிக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஏப்ரல் 17 ஆம் திகதி லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு முதலில் கேட்டுக் கொள்ளப் பட்டிருந்தாலும், அவர் ஆஜராக இயலாமை குறித்து அறிவித்து நேற்று ஆஜராகி வாக்குமூலம் வழங்கினார். (அ)

போத்தலில் அடைக்கப்பட்ட

## குடிதண்ணீருக்கு விலை நிர்ணயம்

கொழும்பு, ஏப். 29

அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் போத்தலில் அடைக்கப்பட்ட உள்ளூர் குடிதண்ணீரை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு ஒரு லட்சம் முதல் ஐந்து மில்லியன் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, மில்லி. 500 குடிதண்ணீர் போத்தல் 70 ரூபாவுக்கும், ஒரு லீற்றர் போத்தல் 100 ரூபாவுக்கும், 1.5 லீற்றர் போத்தல் 130 ரூபாவுக்கும், இரண்டு லீற்றர் போத்தல் 160 ரூபாவுக்கும், ஐந்து லீற்றர் போத்தல் 350 ரூபாவுக்கும் விற்பனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விலைகளின் கீழ், வர்த்தமானி வெளியிடப்படுவதற்கு முன்பு தயாரிக்கப்பட்ட குடிதண்ணீர் போத்தல்களை, அவற்றில் பட்டியலிடப்பட்டுள்ள விலை எதுவாக இருந்தாலும், மேலே குறிப்பிடப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையில் விற்பனை செய்வது கட்டாயமாகும்.

மேலும், வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதிக்குப் பின்னர் தயாரிக்கப்படும் குடிதண்ணீர் போத்தல்களில் புதிய விலையைப் பட்டியலிடுவதும் கட்டாயமாகும்.

இந்த அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் போத்தல் குடிதண்ணீரை விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு ஐந்து லட்சம் முதல் ஐந்து மில்லியன் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிளிநொச்சி மாவட்டத்தில் உப்புக்கு பெரும் தட்டுப்பாடு!

கிளிநொச்சி, ஏப். 29

அண்மைக் காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உப்புக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.இதன் காரணமாக சில வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ உப்பு மாத்திரமே ஒருவருக்கு வழங்கப்பட்டு வருவதாகவும், ஒரு கிலோ உப்பு 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் ஆனையிறவு உப்பு அனைவரது கைகளிலும் என கூறப்பட்டிருந்தபோதிலும் இதுவரை ஒரு கிலோ உப்பைக் கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இந்நிலை தொடருமாயின் தேங்காய்க்கு ஏற்பட்ட தட்டுப்பாடு போன்று உப்புக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர். (அ)

# முன்னாள் அமைச்சர்கள் மூவர் விரைவில் கைது?

### சட்டவிரோதமாக வாகனங்களை பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ்

கொழும்பு, ஏப். 29

**முன்னைய அரசின் காலத்தில் அமைச்சர்களாகப் பதவி வகித்த மூன்று அரசியல்வாதிகள் விரைவில் கைது செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

சட்டவிரோத வாகனப் பயன்பாட்டுக் குற்றச்சாட்டின் கீழேயே இவர்கள் கைது செய்யப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படாத வாகனங்களைப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் ஏற்கனவே முன்னாள் அமைச்சர்கள் மூவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், எதிர்வரும் நாட்களில் மேலும் மூன்று முன்னாள் அமைச்சர்கள் அதே குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படவுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னைய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரும் அதில் உள்ளடங்கியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (அ)

## “தேர்தல் பிரசாரத்துக்கு எனது படம் பயன்பாடு”

### தேர்தல் ஆணைக்குழுவுக்கு சந்திரிகா குமாரதுங்க கடிதம்

கொழும்பு, ஏப். 29

2025 உள்ளூராட்சி தேர்தல் பிரசாரத்துக்கு மக்கள் கூட்டணி தனது படத்தையும் பெயரையும் சட்டவிரோ தமாகப் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.




மக்கள் முன்னணி என்ற கட்சி தனது தேர்தல் பிரசாரத்தின்போது சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களில் எனது படத்தை, பெயரை பயன்படுத்துகின்றது என்ற விடயம் தனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த கட்சி அத்தனகல்ல பிரதேச சபையில் கதிரைச் சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்றது.

எனக்கு அந்த கட்சியுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்களை எனது பெயர், படத்தை பயன்படுத்தவேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளேன் என சந்திரிகா அதில் கூறியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு இது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## 1,560 வாகனங்களுடன் வந்து சேர்ந்தது கப்பல்



கொழும்பு, ஏப். 29

பயன்படுத்தப்பட்ட 1560 வாகனங்கள் கப்பல் மூலம் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்துக்கு எடுத்து வரப்படுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது, இலங்கையில் இறக்குமதித் தடை நீக்கப்பட்ட பின்னர், துறைமுகத்துக்கு வந்த முதல் வாகனக் கப்பலாகும்.

இந்த கப்பலில் நான்கு உயர் மற்றும் கனரக வாகன அலகுகள் உள்ளன.

அத்துடன் ஜப்பானின் டொயோட்டா லாண்ட்க்ரூஸர், பிராடோ, பி.எம்.டபிள்யூ, மெர்சிடிஸ் பென்ஸ், டொயோட்டா ரைஸ், ஹொண்டா வெசெல், டைஹாட்சு மற்றும் சுசுகி வெகன் ஆர் போன்ற பிரபலமான வாகனங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.

இதேவேளை, மற்றுமொரு வாகனக் கப்பல், மே மாத ஆரம்பத்தில் துறைமுகத்துக்கு வர திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 3500 வாகனங்கள் எடுத்து வரப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சி.ரி, எம்.ஆர்.ஐ சோதனை பதிவு இரத்து!

கொழும்பு, ஏப். 29

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உள்ள படக் காப்பகம் மற்றும் தொடர்பு அமைப்பு கடந்த இரண்டு வாரங்களாக செயலிழந்துள்ளமையினால் சிரி மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கான் பரிசோதனைகளுக்கான முன்பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கணினி அமைப்பு வழங்குநருக்கு பணம் செலுத்தாமையினால் முழு தரவு சேமிப்பு வலையமைப்பும் செயலிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பல ஆண்டுகளுக்கு முன்பு, கதிரியக்க சேவைகளை நெறிப்படுத்தும் பக் என்ற அமைப்பை நிறுவப்பட்டுள்ளது.

அதன் விளைவாக, சி.ரி., எம்.ஆர்.ஐ. மற்றும் பிற கதிரியக்க நோயறிதல்கள் தொடர்பான படங்கள் மற்றும் தரவுகள் டிஜிற்றல் மயமாக்கப்பட்டு சேமிக்கப்பட்டன. ரேடியோகிராபிக் படங்களில் படங்களை அச்சிடும் முந்தைய முறை மாற்றி அமைக்கப்பட்டது.

இந்த அமைப்பு செயல்பாட்டுச் செலவுகளைக் குறைக்கும், குறிப்பாக படப் பயன்பாடு தொடர்பான அதிக செலவுகளைக் குறைக்கும் மற்றும் உலகெங்கிலும் உள்ள வைத்தியசாலைகள் பின்பற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப செயல்திறனை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தற்போது பக் அமைப்பின் செயற்பாடுகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, சி.ரி. மற்றும் எம்.ஆர்.ஐ. பரிசோதனைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது நோயாளிகளின் நோயறிதலுக்கு கடும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றியம், சுகாதார அமைச்சர், சுகாதார செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை உடனடியாகத் தலையிட்டு, சேவைகளை விரைவில் மீட்டெடுக்க சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் பேச்சு ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.